[2014 ஆகஸ்ட் 6

வருகிறது. மீண்டுமொரு முறை ஆய்வு செய்து, அலுவலகம் வருவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கிச் செயல்படுத்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், ஆம்பூர் தொகுதியில் ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் துணை மின் நிலையம் மற்றும் ஆம்பூர் நகரம் என்று மூன்று பிரிவு அலுவலகங்கள்தான் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் மேலும் பிரிவு அலுவலகங்களைச் சேர்த்தாலும்கூட, அதிகபட்சமாக, அந்தப் பகுதியில் அதற்குமேல் சேர்ப்பதற்கு வழியில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் 13 பிரிவு அலுவலகங்களை அங்கு புதிதாக உருவாக்கி, 3 உபகோட்டங்கள் உருவாக்கினால் மட்டுமே அதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகவே, அந்த அளவிற்கு நடைமுறைச் சாத்தியம் இல்லாத கோரிக்கையாக இருப்பதால்தான் அதை வற்புறுத்த வேண்டாம் என்று சொன்னேன். மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்கிறார். மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொன்னால், நீங்கள் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள். அதற்குக்கூட வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 346, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

346—

பாலம்

***6563—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்காட்டுப்பள்ளியில் காவேரி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

திருக்காட்டுப்பள்ளியில், காவேரி ஆற்றின் குறுக்கே, நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.20 கோடி செலவில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்கரங்களால், 12-6-2014 அன்று திறந்துவைக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.*

திரு. மு. ரெத்தினசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 2011 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கை. அந்தப் பாலம் சரியாக 18 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்டதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.*

திரு. து. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்குளத்தூர் ஒன்றியம், குமணஞ்சேரி ஊராட்சி, குருவன்மேடு ஊராட்சியை இணைக்கின்ற தரைப் பாலங்கள் மிகவும் பழுதடைந்துள்ளன. மழைக்காலங்களில், தரைப் பாலத்திற்குமேல், தண்ணீர் செல்வதால், வாகனங்களில் செல்பவர்களும், பொதுமக்களும், பள்ளி மாணவர்களும் தரைப் பாலத்தைக் கடந்து செல்ல மிகவும் சிரமப்படுகின்றனர். அதேபோல, குளத்தஞ்சேரி-ரெட்டிப்பட்டிப்பாளையத்தை இணைக்கின்ற தரைப் பாலமும் சேதமடைந்துள்ளதால், இந்த இரு தரைப் பாலங்களையும் அகற்றி, புதிய உயர் மட்டப் பாலங்கள் அமைத்துக் கொடுக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர் மட்டப் பாலம் வேண்டுமென்ற வினாவை எழுப்பியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியை ஆய்வு செய்து, போக்குவரத்து நெரிசலின் அடிப்படையில், நிதிநிலைக்கேற்ப அங்கு பாலம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட கருங்காலி ஊராட்சி அருகிலிருக்கக் கூடிய மேலரசன்பட்டு ஆற்றில் கடந்த 2012 அக்டோபர் மாதம் 30 ஆம் தேதியன்று நீலம் புயலின்போது ஏற்பட்ட மிகப் பெரிய வெள்ளத்தினால், அந்த ஆற்றுப் பாலம் அடித்துச் செல்லப்பட்டது. அவ்வாறு ஆற்றுப் பாலம் அடித்துச் செல்லப்பட்ட காரணத்தினால், கருங்காலி ஊராட்சியைச் சார்ந்த பள்ளி மாணவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என பலதரப்பட்ட மக்களும் வெளியூர்களுக்குச் செல்ல முடியாமல், போக்குவரத்து வசதியின்றி சிரமப்படுகின்றனர். அதேபோல் அந்த நீலம் புயல் பாதித்த நேரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணங்களை வழங்கினார்கள். கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், துணை வினா கேளுங்கள். மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல் பேசுகிறீர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, பாலம் அடித்துச் செல்லப்பட்ட அந்தப் பகுதியில் ஒரு புதிய பாலம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்காலி ஊராட்சி அருகில் உள்ள மேலரசன்பட்டு ஆற்றின்மேல் புதிய பாலம் ஒன்று கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நபார்டு வங்கி நிதியுதவியுடன் ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட அளவில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் பாலங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. வெள்ளம் காரணமாக இந்தப் பாலம் அடித்துச் செல்லப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

347—

வேலைவாய்ப்பு அலுவலகம்

***43445—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூரில் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, அரூரில் தனியாக துணை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.